செய்தி வெளியீட்டு எண்.345 நாள்: 4.7.2009

# மருத்துவப் பட்டப் படிப்பு பயிற்சி மாணவர்களுக்கும், மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும், வழங்கப்படும் மாத உதவித்தொகை உயர்வு !

## முதலமைச்சர் கலைஞர் ஆணை !

இன்றைய நாளேடுகள் சிலவற்றில், மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றி வரும் பயிற்சி மருத்துவர்கள் தங்களுடைய உதவித் தொகையை உயர்த்து மாறு மனித சங்கிலி போராட்டம் நடத்தியதாகவும் – இதே கோரிக்கைக்காக உயர் நீதி மன்றத்திலே வழக்கும் தொடர்ந்து மாண்புமிகு நீதிபதிகள் போராட்டத்தை வாபஸ் பெற்றால் கோரிக்கையை குறிப்பிட்ட காலத்துக்குள் பரிசீலிக்க அரசுக்கு உத்தரவிடுகிறோம் என்று கூறியதாகவும் செய்திகள் வந்துள்ளன.

ஆனால், பயிற்சி மருத்துவர்களின் உதவித் தொகையை உயர்த்து வதற்கான கோரிக்கை ஏற்கனவே அரசுக்கு வந்து – அது குறித்த கோப்பு செயலாளர்களின் பரிசீலனைக்குப் பின்னர் 3–7–2009 அன்று முதல் அமைச்சரின் ஒப்புதலுக்கும் வந்து – அன்றே முதலமைச்சர் பயிற்சி மருத்துவர்களின் உதவித் தொகையையும், பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவர்களின் உதவித் தொகையும் பின்வருமாறு உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழக அரசின் கீழ் மருத்துவப் பட்டப் படிப்பு பயிலும் பயிற்சி மாணவர்களுக்கும், மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கும் மாதந்தோறும் வழங்கப்பட்டுவரும் உதவித்தொகையை உயர்த்திட முடிவு செய்து, அதன்படி, மருத்துவப் பட்டப் படிப்பிற்கான பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 4 ஆயிரத்து 500 ரூபாய் என்பதை 6 ஆயிரம் ரூபாய் என்றும்; அரசுப் பணிசாரா மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் முதலாண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 8 ஆயிரம் ரூபாய் என்பதை 12 ஆயிரம் ரூபாய் என்றும்;

இரண்டாமாண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 8 ஆயிரத்து 500 ரூபாய் என்பதை 13 ஆயிரம் ரூபாய் என்றும்;

மூன்றாம் ஆண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 9 ஆயிரம் ரூபாய் என்பதை 14 ஆயிரம் ரூபாய் என்றும்;

சிறப்பு மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் முதலாண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 9 ஆயிரத்து 500 ரூபாய் என்பதை 15 ஆயிரம் ரூபாய் என்றும்;

சிறப்பு மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 10 ஆயிரம் ரூபாய் என்பதை 16 ஆயிரம் ரூபாய் என்றும்;

சிறப்பு மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் மூன்றாமாண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 10 ஆயிரம் ரூபாய் என்பதை 17 ஆயிரம் ரூபாய் என்றும்;

நான்காம் ஆண்டு மற்றும் ஐந்தாம் ஆண்டுகளில் நரம்பியல் அறுவை மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் மருத்துவ மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 10 ஆயிரம் ரூபாய் என்பதை நான்காம் ஆண்டில் 15 ஆயிரம் ரூபாய் என்றும்;

ஐந்தாம் ஆண்டில் 16 ஆயிரம் ரூபாய் என்றும் 1.7.2009 முதல் உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் நேற்று (3.7.2009) ஆணையிட்டுள்ளார்.

மேலும், மருத்துவ பட்டப் படிப்பு பயிற்சி மாணவர்களுக்கு மாதம் 300 ரூபாய்; பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும், பட்ட மேற்படிப்பில் சிறப்புப் பிரிவு பயிலும் மாணவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டிலும் மாதம் 600 ரூபாய் என கூடுதலாக வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

மருத்துவப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கும், மருத்துவ பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் உயர்த்தி வழங்கப்படும் இந்த உதவித் தொகைகள்

**காரணமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 9 கோடியே 60 இலட்ச ரூபாய் கூடுதல் செலவாகும்.**

**இந்த உண்மை தெரியாமல், நன்றாக படித்த பயிற்சி மருத்துவர்களே நோயாளிகளைக் கவனிக்க வேண்டிய தங்கள் பணியினை மறந்து, அவசர அவசரமாகப் போராட்டம் நடத்த முன் வந்தது மிகவும் வருந்தத்தக்கது. எனினும் அரசின் முயற்சியை இனியாவது உணர்ந்து போராட்டத்தை கை விட்டு பணிக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 9.